சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **41 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **27.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பரிமணம் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் தற்பொழுது குளித்தலை அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்த சம்மன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி குளித்தலை அரசு மருத்துவமனையில் கடந்த 08.10.2019ம் தேதி ஸ்ரீதரன் என்பவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட அதனுடைய ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1, மேற்படி எ.ம.சா.ஆ-1 ஆவணத்தில் சைக்கிளில் செல்லும்போது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்ததாக கூறப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி எ.ம.சா.ஆ-1 ஆவணத்தை நான் பதிவு செய்யவில்லை. அதனை பதிவு செய்த மருத்துவர் தற்பொழுது பணியில் உள்ளார். மேற்படி எ.ம.சா.ஆ-1 ஆவணத்தை பதிவு செய்த மருத்துவரை விசாரணை செய்தால் தான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.